**முதன்மை மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்**

**O.S.No.118/2021**

**சாட்சியின் சான்றுரை PW-1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | - | ரகுநாதன் | வட்டம் | - | |
| த/பெ | - | பிரபாகரன் | சாதி | - | |
| வயது | - | | மதம் | - | |
| கிராமம் | - | | தொழில் | - | |

18.10.2023 இன்று 1969ஆம் ஆண்டு சட்டம் 10-ன் படி என்னால் உறுதிமொழி கொடுத்து சாட்சியமளிக்கப்பட்டது.
வாதி சாட்சி 1 மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

எனக்கு என்ன அவணத்தின் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் கடன் பத்திரத்தின் அடிப்படையில் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என் வழக்கில் அந்த ஆவணம் பிராமிசரி நோட்டு என்று நான் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அந்த கடன் பத்திரத்தை யார் வாங்கி கொடுத்தார்கள் என்றால் பிரதிவாதி தான் வாங்கிவந்தார். எப்போது வாங்கிவந்தார் என்றால் 12.02.2020ல் வாங்கிவந்தார். தாவாவில் நான் பிராமிசரி நோட்டின் அடிப்படையில் பணம் கொடுக்கவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றும் அது பிராமிசரி நோட்டா என்றால் அது கடன் பத்திரம் தான். எனக்கு பிராமிசரி நோட்டிற்கும் கடன் பத்திரத்திற்கும் வித்தியாசம் தெரியவில்லை என்றால் ஆம். 2007லிருந்து பிரதிவாதியை தெரியும் அவர் கடன் வாங்கி இருக்கிறார். திருப்பி செலுத்தியுள்ளார். அவர் தம்பி மூலமாக வாங்கியுள்ளார். அந்த விவரத்தை நான் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நம்பிக்கை பேரில் வாங்குவார் நான் கொடுப்பேன். நான் சொல்வது போல் கடன் பத்திரம் பிரதிவாதி எழுதி கொடுக்கவில்லை என்றும் அதில் உள்ள கையெழுத்து அவரது இல்லை என்றால்

சரியல்ல. பிரதிவாதி கணவருடன் பிரிந்து தனியாக எவ்வளவு நாள் வாழந்துவருகிறார் என்றால் அவருக்குள் சண்டையா என்று தெரியாது. 12 வருடமாக வாழ்கிறாரா என்று எனக்கு தெரியாது. பிரதிவாதி கணவருடன் இருந்து 12 வருடமாக பிரிந்து தான் வாழ்கிறார் என்பது எனக்கு தெரியும் என்றால் தெரியாது. அவர் தம்பி வீட்டில் இருப்பதால் நன்றாக பேசிக்கொண்டிருந்தார்கள். நான் ஒன்றாக இருக்கிறார்கள் என்று நினைத்தேன். பிரதிவாதியின் தகப்பனார், தம்பி ஆகியோரை தெரியும். அரசியல் ரீதியாக என் வீட்டில் வந்தார். மோசடிகள் செய்துவிட்டார். என்னுடைய கையெழுத்தை போட்டு பிரதிவாதியின் தம்பி காசோலை கொடுத்துவிட்டார். அதற்காக நான் தனியாக வழக்கு போடப்போகிறேன். அதை கேட்டபின்பு தான் அவர்கள் என்னிடம் பேசவில்லை. 2021ல் தான் அவ்வாறு செய்ததாக தெரியும். அதற்கு முன்பு அனைவரும் நன்றாக என் வீட்டிற்கு வந்து செல்வார்கள். அதற்கு புகைப்படம் உள்ளது. காசோலை மோசடி சம்மந்தமாக புகார் எதுவும் கொடுத்துள்ளேனா என்றால் கொடுக்கப்போகிறேன். பிரதிவாதி எழுதிய எதிர்வாக்குரையை நான் படித்து பார்த்தேன். அதில் பிரதிவாதி அந்த பத்திரத்தில் உள்ள சாட்சிகள் யாரென்று தெரியாது என்றும் அது சம்மந்தமாக விவரங்களை கேட்டு ஆட்சேபனை போடப்பட்டது என்றும் அதை நான் கொடுக்காமல் தற்போது தான் சாட்சியை கொண்டுவந்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் ஏற்கனவே சாட்சிகளை பற்றி எனது வழக்கறிஞருக்கு விவரங்களை கொடுத்துவிட்டேன். அது சம்மந்தமாக

பிரதிவாதிக்கு தெரிவிக்கப்பட்டதா என்றால் எனது வழக்கறிஞர் சொல்வதாக என்னிடம் தெரிவித்தார். அதுபோல நான் இதுவரை கொடுக்காமல் இதற்கு முந்தைய வாய்தாவில் தான் அவர்களை ஆஜர் செய்தேன் என்றால் சரியல்ல.

Sd/- R.Poornima,
Principal Sessions Judge,
Villupuram.